செ.வெ.எண்: 264/2021 நாள்: 28.06.2021

# திருவண்ணாமலை மாவட்ட தலைநகர் வளர்ச்சி குறித்தான ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்றது...

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (28.06.2021) திருவண்ணாமலை மாவட்ட தலைநகர் வளாச்சி குறித்தான ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எ. வ. வேலு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. கு. பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பா. முருகேஷ், இ.ஆ.ப., திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி. என். அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. மு. பெ. கிரி (செங்கம்), திரு. எஸ். அம்பேத்குமார் (வந்தவாசி), திரு. பெ. சு. தி. சரவணன் (கலசபாக்கம்), திரு. ஓ. ஜோதி (செய்யாறு), மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. அ. பவன் குமார் ரெட்டி, இ.கா.ப., கூடுதல் ஆட்சியர் மற்றும் திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திரு. மு. பிரதாப், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு. இரா. முத்துகுமரசாமி, மாவட்ட வன அலுவலர் திரு. அருண்லால், இ.வ.ப., கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. அசோக்குமார், திட்ட இயக்குநர் மகளிர் திட்டம் திருமதி. சந்திரா, வேலூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திரு. விஜயகுமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு. கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. த. வேணுகோபால், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவானந்தம், அரசு அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அரசு அமைப்பு சாரா அலுவலர்கள், நிறுவனங்கள், அமைப்புகள், தனி நபர்கள் மற்றும் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது ‘திருவண்ணாமலை நகரத்திற்கு பல பெருமைகள் உள்ளது. அண்ணாந்து பார்ப்பது என்பது விண்ணைப் பார்ப்பது, இதில் அண்ணாவின் பெயர் இருக்கிறது. அண்ணாந்து பார்க்கும் கூம்பு வடிவத்தில் பெரிய மலையாக திகழ்வதால் அண்ணாமலை என்று அழைக்கப்பட்டு, அதில் திரு சேர்க்கப்பட்டு காலா காலமாக திருவண்ணாமலை என பேசப்பட்டு வருகிறது. ஒரு காலத்தில் அண்ணா நாடு என்று ஆய்வாளர்கள் கூறிய நாட்டின் தலைநகராக திருவண்ணாமலை திகழ்ந்துள்ளது. மனிதனின் உடலில் 9 துவாரங்கள் உள்ளது, அது போல் திருவண்ணாமலை நகரம் வருவதற்கு 9 சாலைகள், திருவண்ணாமலை கோயிலில் 9 கோபுரங்கள் உள்ளன, எப்படி ஒரு பொருத்தமான ஊராக திகழ்கிறது.

காப்பியத்தில் 2000 ஆண்டுகள் கி.மு. முதல் நூற்றாண்டில் மதுரை நகரம் முன்பு திருவண்ணாமலை தோன்றியதாக உள்ளது. ஆங்கிலேயர் காலத்தில் திருவண்ணாமலை நகராட்சி உருவாக்கப்பட்டு, தற்போது 135 ஆண்டு பழமையான நகரமாக திகழ்கிறது. ஒரு காலத்தில் வடஆற்காடு மாவட்டத்தின் தலை நகராக சித்தூர், தென் ஆற்காடு தலை நகராக கடலூர் இருந்த போது தென் ஆற்காடு பகுதியில் திருவண்ணாமலை நகராட்சி இருந்துள்ளது. இதனால் தான் நெடுஞ்சாலைத் துறையில் சித்தூர் கடலூர் சாலை (CC Road) என கூறப்பட்டு வருகிறது. இதன் பின்பு வடஆற்காடு மாவட்டத்தின் தலை நகராக வேலூர் உருவாக்கப்பட்டு அதில் திருவண்ணாமலை நகராட்சி சேர்க்கப்பட்டது.

நெஞ்சம் எல்லாம் நிறைந்திருக்கும தலைவர் கலைஞர் அவர்களால் 1989 ஆம் ஆண்டு திருவண்ணாமலை மாவட்டத்திற்கு முகவரி அளிக்கப்பட்டு பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. திருவண்ணாமலையில் 10 நாள் நடைபெறும் கார்த்திகை தீபம் நிகழ்விற்கு 20 ஆண்டுகளுக்கு முன்பு முதல் இருந்ததை விட, ஒவ்வொரு மாதமும் லட்சக்கணக்கான பக்தர்கள், பொதுமக்கள் கூடுகிறார்கள். திருவண்ணாமலை இந்த மாவட்டத்தின் தலைநகர் மட்டும் அல்ல, ஆண்மீக நகரமாக திகழ்கிறது. தமிழ்நாட்டில் மட்டும் அல்லாமல், பல்வேறு மாநிலங்களிலிருந்தும், உலக நாடுகளிலிருந்தும் பக்தர்கள் வருகை புரிகிறார்கள்.

நமது மாநிலத்தின் புகழ் பெற்ற ஆண்மீக நகராக திருவண்ணாமலை திகழ்ந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சென்று திருநகர் வளர்ச்சிக்கு தேவையான முக்கிய பணிகள் அனைத்தும் உடனடியாக நிறைவேற்றப்படும். திருவண்ணாமலை மாவட்ட தலைநகர் வளர்ச்சிக்கான ஆய்வுக் கூட்டத்தில் 40-க்கும் மேற்பட்ட அமைப்புகள் கலந்து கொண்டுள்ளனர். நான் இந்த மண்ணின் மைந்தன், உங்கள் வீட்டுப் பிள்ளை, திருவண்ணாமலை நகரின் வளர்ச்சிக்கான உங்களது கோரிக்கைகள் தெரிவிக்க கேட்டுக் கொள்கிறேன்' என்றார்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கூட்டத்தின் நிறைவுறையில் தெரிவிக்கையில் 'திருவண்ணாமலை மாவட்ட தலைநகர் வளர்ச்சிக்கான ஆய்வுக் கூட்டத்தில் பல நல்ல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து சம்மந்தப்பட்ட அரசுத் துறை அலுவலர்கள் அதனை செயல்வடிவம் கொண்டு வருவதற்கு முனைப்புடன் செயல்பட வேண்டும். குடிநீர், குளியல், கழிப்பறை உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் குறித்து கோரிக்கை வைக்கப்பட்டது. திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மேம்பாடு, செங்கம் சாலையில் அமைந்துள்ள பழைய அரசு மருத்துவமனையில் 100 படுக்கை வசதியுடன் சிகிச்சை அளிப்பதற்கு ஏற்பாடு, திருவண்ணாமலை மையப் பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைத்தல், இளைஞர்களுக்கு உடற்பயிற்சி கூடம், வட்டாட்சியர் அலுவலகம் பின்புறம் மற்றும் தாமரை நகரில் செயல்பட்டு வரும் உழவர் சந்தைகள் சீர்படுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை நகரம் மற்றும் வேங்கிக்கால் பகுதிகளில் பல்வேறு தொற்று வியாதி பாதிப்பு ஏற்படுத்தி வரும் ஈசான்யம் குப்பை பகுதியை நகரத்தின் வெளியில் அமைக்க வேண்டும், சின்னக் கடை தெரு விரிவாக்கம், கூடுதல் மின்சார எரிவாயு தகன மேடை அமைத்தல் உள்ளிட்ட கோரிக்கைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. திருவண்ணாமலை நகரத்தில் 2006-2011 ஆட்சியில் நகர காவல் நிலையம், கிழக்கு காவல் நிலையம் திறக்கப்பட்டது. தற்போது 14 கி.மீ. கிரிவலப் பாதை மேற்கு பகுதியில் ஒரு காவல் நிலையம் அமைக்க கோரிக்கை வைக்கப்பட்டது. திருவண்ணாமலை நகரத்தில் சட்டம் ஒழுங்கு பாதுகாக்க காவல் துறைக்கு கூடுதல் சிசிடிவி கேமரா வசதி ஏற்படுத்தி தர வேண்டும், அரசுக் கலைக் கல்லூரி எதிர்புறம் உள்ளிட்ட அரசு அலுவலர் குடியிருப்புகள் புதுப்பிக்கவும் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரசவம் அதிகமாக நடைபெறுகிறது, அதனை மேலும் மேம்படுத்திடவும், பழைய அன்னதானக் கூடம் புதுப்பிக்கவும், திருவண்ணாமலை மகளிர் மேல்நிலைப் பள்ளியில் மாணவிகள் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால், கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தருவதற்கும் கோரிக்கை வைக்கப்பட்டது. இக்கோரிக்கை தொடர்பாக மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் இன்று காலை பேசியுள்ளேன், விரைவில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். திருவண்ணாமலை நகரத்தின் போக்குவரத்து பிரச்சனைக்கு தீர்வு காணவும், புதிய பேருந்து நிலையம் அமைக்கவும் கோரிக்கை வைக்கப்பட்டது.

திருவண்ணாமலை நகரத்தில் படித்தவர்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாலும், பல்வேறு தமிழ்ச் சங்கங்கள் செயல்பட்டு வருவதாலும், தமிழ் வளர்ச்சிக்காவும், ஒரு புதிய விரிவான நூலகம் அமைக்க வேண்டும், திருவண்ணாமலை பெருமை, வரலாறு, ஆண்மீகம் தொடர்பான ஒரு புத்தகம் வெளியிட கோரிக்கை வைக்கப்பட்டது. இது குறித்து ஒரு வல்லுநர் குழு அமைத்து நான் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி திருவண்ணாமலை தலைநகர் மற்றும் ஒட்டு மொத்த மாவட்டத்தின் பெருமைகள் குறித்த புத்தம் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள இந்து கோயில்களை செம்மைப்படுத்த ஒரு உயர்மட்ட குழு அமைத்துள்ளார்கள். இக்குழு மூலம் திருவண்ணாமலை திருக்கோயில் மேம்படுத்துவற்கு எண்ணற்ற பணிகள் மேற்கொள்ளப்படும். திருப்பதியை போல் திருவண்ணாமலை திருக்கோயில் மாட வீதிகள் கான்கிரீட் சாலையாக அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு முதல் பணியாக திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விரைவில் அறிவிப்பு வெளியிடப்படும். திருவண்ணாமலை நகரத்திற்கு வரும் வெளியூர் மக்களின் கோரிக்கை 14 கி.மீ. கிரிவலப் பாதையில் கூடுதல் குடிநீர், கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தவும், பகலில் வெயில் அதிகமாக இருக்கும் நாட்களில் இரவில் தார் சாலையில் நடக்கும் போது கால் கொப்பளித்து விடுவதாகவும், இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

திருவண்ணாமலை 14 கி.மீ. கிரிவலப் பாதை மற்றும் நான்கு மாட வீதிகள் கான்கிரீட் சாலையாக அமைக்கப்படும், இதற்கான அறிவிப்பு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களால் விரைவில் அறிவிக்கப்படும். தமிழ்நாட்டின் தற்போது நிதி நிலை சரியாக இல்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10 நாட்களில் தமிழ்நாட்டின் நிதி நிலை குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட உள்ளார்கள், அதனை தொடர்ந்து பட்ஜெட் கூட்டத் தொடர் நடைபெறுகிறது. திருவண்ணாமலை பேருந்து நிலையம் நகரத்தின் வெளியில் வெளிவட்ட சாலை ஒட்டி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் 'மாவட்ட தலைநகரான திருவண்ணாமலை ஆண்மீக திருத்தலத்திற்கு தமிழ்நாட்டிலிருந்தும், பல்வேறு மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் அதிகளவில் மக்கள் வருகை புரிகிறார்கள். திருவண்ணாமலை நகரத்தின் வளர்ச்சிக்கான இன்றைய கூட்டத்தில் பல்வேறு அமைப்புகள் பல்வேறு கோரிக்கைகள் தெரிவித்துள்ளனர். திருவண்ணாமலை நகரத்தில் சீரான போக்குவரத்து, சாலை வசதி, புதிய பேருந்து நிலையம், கலையரங்கம், படிப்பதற்கு பெரிய நூலகம் உள்ளிட்ட கோரிக்கைகள் தெரிவிக்கப்பட்டது. வியாபாரிகள் பொருட்களை பதப்படுத்த குளிர் பதனிடும் கிடங்கு அமைக்கவும், மலையிலிருந்து வரும் மழை நீர் நகரத்தின் சாலைகளில் செல்வதால், தண்ணீர் பாதைகள் சீரமைக்கவும் கோரிக்கை வைக்கப்பட்டது.

சட்டமன்ற பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்ட அண்ணாமலையார் கோயில் தேரடி வீதி மற்றும் 14 கி.மீ. கிரிவலப் பாதை கான்கீரீட் சாலையாக அமைக்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றப்படும். மேலும் ஒத்தவடை தெற்கு, வடக்கு உட்பட கோயில் சுற்றி உள்ள நான்கு சாலைகளும் கான்கிரீட் சாலையாக அமைப்பதற்கான நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும். திருவண்ணாமலை நகராட்சி மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், திருக்கோயிலுக்கு வரும் வயதானவர்கள் பயன்பாட்டிற்கு பிரகாரம் வரை செல்வதற்கு ஒரு பேட்டரி கார் மட்டும் உள்ளது, கூடுதலாக 4 பேட்டரி கார்கள் இயக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தமிழக அரசின் நிதி நிலை குறித்து வெள்ளை அறிக்கை விடும் நிலையில் உள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களிடம் எடுத்துச் சென்ற திருவண்ணாமலை நகரம் மற்றும் மாவட்டத்திற்கு தேவையான அனைத்து வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும், இதற்கு நான் உறுதுணையாக இருப்பேன்' என்றார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**